1983 பிப்ரவரி 12]

திரு. தி. கா. நல்லப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பதநீர் இறக்குகின்ற பனை ஏறும் தொழிலாளர் களுக்கு அனுமதி வழங்குகின்றபோதே ஆபத்து வேலையில் ஈடுபடு கின்ற காரணத்தால் அவர்கள் இந்த ஜனதா இன்சூரன்ஸில் சேர்ந்தால் தான் முன்னிரிமை வழங்குவதற்கு அரசு ஏதாவது சட்டம் இயற்றுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்சூரன்ஸ் பாலிஸி என்பது கட்டாயப்படுத்துவது அல்ல. தொழிலாளர்கள் அதை உணர்ந்து அதை நிறைவேற்றுவார்களானால் அதனால் அவர்களுக்கு நலனும் பலனும் ஏற்படும் என்பதை அவர்கள் புரிந்து இந்த ஜனதா இன்சூரன்ஸ் பாலிஸியில் சேர்ந்தால் அதனால் அவர்களுக்கு நல்ல பலன் கிடைக்கும். தொழிலாளர்கள் ஜனதா இன்சூரன்ஸ் பாலிஸியில் சேருவதற்கு வருடம் 12 ரூபாய் அதாவது மாதம் 1 ரூபாய் கட்ட வேண்டும் என்ற நல்ல எண்ணத்தை அவர்கள் பெற்று ஆக வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. தகவல் கோரல்.

### உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன் அறிவிப்புகள்

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : தலைவர் அவர்களே, தங்களு டைய மேலான கவனத்திற்காக இதனை வைக்க விரும்புகிறேன். சட்டமன்ற உறுப்பினர்களாகிய எங்களை கரும்புக்கு விலை நிர்ண யம் செய்ய வேண்டுமென்று கடந்த ஜனவரி மாதம் 8 ஆம் தேதி அமைச்சர் அவர்கள் அழைத்துப் பேசினார்கள். அது சமயம் ஒரு வாரத்திலே நான் சொல்கிறேன் என்று சொன்னார்கள் அவர்களைக் கலந்துகொண்டுதான் கால் அட்டென்ஷன் கொடுத்தோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கொடுத்திருக்கிறீர்கள். அரசுக்கு அதை அனுப்பியிருக்கிறேன். வந்தவுடன் எடுத்துக் கொள்ளலாம்.

திரு. சோ. அழகர்சாமி : தலைவர் அவர்களே, கரும்புக்கான விலை சம்பந்தமாக முத்தரப்பு மாநாடு ஒன்றை அமைச்சர் அவர்கள் கூட்டி நாங்கள் எல்லாம் போய் அங்கே பெரிய விவாதம் நடந்தது. சீக்கிரமாக அறிவிக்கிறேன் என்று சொன் னார்கள். ஆனால் இதுவரையில் அறிவிக்கவில்லை. 120 ரூபாய் தான் கொடுக்கிறார்கள். 175 ரூபாய்.........

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கிருஷ்ணமூர்த்தி கொடுத்ததை நான் அரசுக்கு அனுப்பியிருக்கிறேன். பதில் வந்தவுடன் எடுத்துக்கொள்ளலாம்.

திரு. சோ. அழகர்சாமி : தாங்கள்தான் பெற்றுத்தர வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சீக்கிரம் பெற்றுத்தர முயல்கிறேன்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : அக்ரிகல்சர் மினிஸ்ட்டர் இப்போது திருச்செந்தூரில் இருப்பதால் இன்டஸ்ட்ரிஸ்மினிஸ்ட்டர் கால் அட்டென்ஷனை எடுத்துக்கொண்டு பதில் சொல்லலாம். இன்னும் இரண்டு நாட்கள் தான் சட்டசபை கூட்டம் இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மே மாதம் வரை அது இருக்கிறது.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : இந்தி பாட்டு எழுதினால் 150 ரூபாய்; தமிழ் பாட்டு எழுதினால் 100 ரூபாய் என்று..................

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதை நீங்கள் கொடுக்கவில்லை. கொடுத்தவர் கேட்கும்போது நான் சொல்கிறேன்.

திரு. ப. பொன்னுரங்கம் : கடந்த 7 ஆம் தேதி நான் ஒரு ஒத்திவைப்பு தீர்மானம் கொடுத்திருந்தேன், சென்னையிலே, மின்டிலே இருக்கக்கூடிய தொழிலாளர்கள்...............

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் தினசரி ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் எடுத்துக்கொண்டுதான் இருக்கிறேன்.

திரு. ப. பொன்னுரங்கம் : சட்டசபைக் கூட்டம் இன்னும் இரண்டுநாள்தான் இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 3 ஆம் தேதி ஆரம்பிக்க இருக்கிறது, தொடர்ந்து மே மாதம் வரை போகிறது.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவர் அவர்களே மாண்புமிகு உறுப்பினர் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் ** ஆகவே அவர்கள் சொன்னதையும் நான் சொன்னதையும் நீக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவற்றை நீக்கிவிட ஆணையிடுகிறேன்.

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

1983 பிப்ரவரி 12]

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : முடிவு எடுத்ததாக நான் அறிகிறேன் என்றுதான் சொன்னேன். அவர் கமிட் பண்ணியதாக நான் சொல்லவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முறையாக வந்தால் இப்படிப்பட்ட விவாதம் வராது, நல்ல பதில் வந்திருக்கும்.

திரு. இரெ. இராசமாணிக்கம் : தமிழகத்திலே ஒட்டல் பண்டங்களுடைய விலைகள் ஏராளமாக ஏறியிருக்கின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதைப்பற்றி தனியாகக் கொடுங்கள். உங்கள் ஊரிலே நெல் விலையைக் குறைத்துவிடுங்கள், பண்டங்களின் விலையை குறைக்கச் சொல்லலாம்.

### 3. அறிவிப்புகள்.

#### (அ) ஆளுநரிடமிருந்து செய்தி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மேதகு ஆளுநர் அவர்களிடமிருந்து 10—2—1983 ஆம் தேதியிட்ட கீழ்க்காணும் செய்தி வரப்பெற்றது என்பதைப் பேரவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன் :

"I have received with satisfaction, your resolution thanking me for my Address on the 24th January 1983 to the Members of the Legislature".

(முற்பகல் 10—40)

### 4. கவன ஈர்ப்புகள்.

(அ) அம்பிளிக்கை பயிற்சி நிலையத்தில் பயின்றவர்களை நர்சிங் கவுன்சில் பதிவு செய்ய மறுப்பது—

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

" மதுரை மாவட்டம் அம்பிளிக்கை கிறித்துவ சமுதாய சுகாதார வழிகாட்டிகள் பயிற்சி நிலையத்தில் பயின்ற சுமார் 300 பேரை தமிழக நர்சிங் கவுன்சில் பதிய மறுப்பது குறித்த " அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

#### அறிக்கை.

தமிழ்நாடு செவிலியர் மருத்துவத் தாதியர் மன்றம் ஒரு சட்ட பூர்வமான தனித்தியங்கும் அமைப்பாகும். இம்மன்றம், மற்றப் பணிகளுடன், அங்கிகரிக்கப்பட்ட பயிற்சிகளுக்கு பாடத்திட்டங்கள் வகுத்தல் செவிலியப் பணியினை ஒழுங்குபடுத்துதல்,